# பாரதிய ஜனதா கட்சி
# (மத்திய அலுவலகம்)
# 11,அசோக் சாலை,புதுடெல்லி, 110 001

தேதி: மார்ச் 15,2013

## எல்லை தாண்டிய பயங்கரவாதம் தொடர்பாக பாஜக தேசிய தலைவர் திரு.ராஜ்நாத் சிங் வெளியிட்டிருக்கும் அறிக்கை

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் அப்சல் குரு தூக்கு தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பாரதிய ஜனதா கட்சி வன்மையாக கண்டிக்கிறது. இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிடும் மோசமான செயல் இது. இந்தியாவுடனான அனைத்து ராஜதந்திர உறவு வரம்புகளையும் பாகிஸ்தான் மீறிவிட்டது. இந்தியாவில் செயல்படும் கிட்டத்தட்ட அனைத்து தீவிரவாதங்களும் பாகிஸ்தானால் உதவி அளிக்கப்படுபவை என்று பாஜக உறுதியாக நம்புகிறது. பாகிஸ்தான் தனது நாட்டின் தேசிய அவையில், அப்சல்குரு தூக்கு தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் தீவிரவாத அமைப்புகளுடன் தனக்கு இருக்கும் தொடர்பை முத்திரையாகவே பதித்துள்ளது.

மத்தியில் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கோ, தீவிரவாதத்தை எதிர்த்து போராடுவதற்கான உறுதியான தெளிவு ஒன்றும் இல்லை. மத்திய அரசு பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதத்தை எதிர்த்து உறுதியான முயற்சிகளை எடுப்பதற்கு பாஜக தனது முழு ஆதரவையும் கொடுத்துள்ளது. ஆனால் மத்திய அரசு, நம்மையும் நாட்டு மக்களையும் ஒட்டுமொத்தமாக ஏமாற்றிவிட்டது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசோ, பாஜகவை தாக்குவதற்கே தனது ஆற்றல் மொத்தத்தையும் செலவிட்டுவிட்டு, நாட்டை தீவிரவாதத்திலிருந்து பாதுகாப்பதில் போதிய கவனம் செலுத்தாமல் இருக்கிறது.

இந்திய ராணுவத்தினரின் தலைகளை வெட்டியது , ஐதராபாத்தில் தாக்குதல் நடத்தியது தொடங்கி ஸ்ரீநகர் சிஆர்பிஎப் முகாமில் தாக்குதல் நடத்தியது வரை எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை தடுப்பதில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு திறனில்லை என்பதையே காட்டுவதாக உள்ளது. தீவிரவாதிகளிடமிருந்து நமது நகரங்களையும் மக்களையும் காப்பதற்கு எந்த உறுதியான திட்டமோ நடவடிக்கையோ ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசிடம் இல்லை.

ஸ்ரீநகரில் நடந்த பிடாவீன் தாக்குதல்களுக்குப் பிறகு இந்தியா, தனது ராஜதந்திர உறவுகளை பாகிஸ்தானுடன் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று பாஜக கோருகிறது. பாகிஸ்தான் தனது மண்ணில் இந்தியாவுக்கு எதிரான எந்த தீவிரவாத நடவடிக்கைகளையும் ஊக்குவிக்காது என்று ஜனவரி 2004 இல் கொடுத்த வாக்குறுதியை பாகிஸ்தான் காப்பாற்றினால் ஒழிய, இருநாடுகளுக்குள் நடந்துவரும் நட்புறவையும், நம்பிக்கையையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல் அவசியம்.

பாகிஸ்தான், இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதத்துக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்துக் கொண்டிருந்தால், இந்தியா தனது வெளியுறவுத் தூதரை இஸ்லாமாபாத்திலிருந்து திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும். பாகிஸ்தானுக்கு வக்காலத்து வாங்கும் கொள்கையைத் தொடர்ந்து ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மேற்கொண்டால் அது தீவிரவாதிகளுக்கு ஊக்கத்தையும், இந்தியாவுக்கு எதிரான சக்திகளுக்கு பலத்தையுமே அளிக்கும். தீவிரவாதிகள் தங்கள் குழுக்களை மீண்டும் பலமுடன் திரட்டி வருகின்றனர். 2014 இல் நேட்டோ படைகள் ஆப்கனிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட இருக்கும் நிலையில் இன்னும் நிலைமை மோசமாகும்.

நமது பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட, தற்போது எழுந்திருக்கும் சவால்களை சந்திக்கும் திறனுடைய ராணுவத்தை தயார்படுத்துவது அவசியம். இந்தியாவின் ராணுவ பலத்தைக் கூட்டும் முயற்சியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கவனம் செலுத்தவேண்டும். அத்துடன் படைக்கலன்களையும் தொடர்ந்து

நவீனப்படுத்த வேண்டும். பலவீனமான நிலையிலிருந்து ஒருபோதும் அமைதியை நிலைநாட்ட முடியாது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தை மனதில் கொண்டு, அந்த நடவடிக்கையை இந்திய நாடாளுமன்றத்தில் நமது அரசு கண்டித்து தீர்மானம் இயற்றுவதன் மூலம் தீவிரவாதத்துக்கு எதிரான தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும். இந்த தீர்மானத்தை பிரதமரே கொண்டுவர வேண்டியது அவசியம்.

பாகிஸ்தான் தனது வழிகளைத் திருத்திக்கொள்ளும் வகையில் தீவிரவாதம் மீது போதிய நடவடிக்கைளை எடுக்குமாறு மத்திய அரசு நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டிய நேரம் இது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, தனது ராஜதந்திர திறன்களை சரியாக பயன்படுத்தவில்லையெனில் பாகிஸ்தானின் ஆதரவு பெற்ற தீவிரவாத சக்திகள் இந்தியாவைத் தொடர்ந்து காயப்படுத்திக்கொண்டே இருப்பார்கள்.

(ஓ.பி.கோஹ்லி)
தலைமை நிலைய பொறுப்பாளர்